1995 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1995) நிறைவேற்றப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1995) மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 32/1995) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

@3-11-1995-ஆம் நாளைய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கேளிக்கை வரி சட்டத்திற்கு கொண்டுவந்திருக்கிற இந்த சட்டத் திருத்தத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் எதிர்க்கிறேன். காரணம், தமிழ்நாடு திரைப்படம் காணபிப்போர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் அரசாங்கத்திற்கு ஒரு கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் மெயின்டெனன்ஸ் சார்ஜ் என்ற—அந்த குளிர் சாதனம் செய்யப்பட்ட/குளிர் சாதனம் செய்யப்படாத— ஏற்கெனவே ஒரு டிக்கெட்டுக்கு என்று ஒரு பணத்தை வசூலித்துவிட்ட பிறகு, அதற்கு ஒரு மெயின்டெனன்ஸ் சார்ஜ் என்று இதிலே சேர்த்திருப்பது உண்மையிலேயே மக்கள் தலையிலே பளுவை நீங்கள் சுமத்துகிறீர்கள் என்றுதான் பொருள். அதுவும், 1993–ஆம் ஆண்டு ஏற்கனவே நீங்கள் ஒரு அரசு ஆணையை பிறப்பித்து, அதுவும் 6–ஆம் நாளிலிருந்து அமுலுக்கு வந்துவிட்ட பிறகு இப்போது சட்டத் திருத்தம் கொண்டு வருவது என்பது சரியல்ல. ஏற்கனவே சட்டமன்றம் கூடியபோது, இந்த 'மெயிண்டனன்ஸ் சார்ஜ்' வைக்கலாமா, வைக்கக்கூடாதா என்று சட்டமன்றத்திலே விவாதித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் வாயிலாகக் கருத்தைக் கேட்டுக் கொண்டு வந்திருக்கலாம். ஏற்கனவே, சினிமா தியேட்டர்காரர்களெல்லாம் கலெக்டர் அனுமதியைப் பெற்று டிக்கெட்டின் விலையை ஏற்றிக் கொள்ளலாம் என்ற வரன்முறையை நீங்கள் கொண்டு வந்த பிறகு மேலும், 'மெயின்டனன்ஸ் சார்ஜஸ்' வேண்டுமா என்பதே எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் நான் கேட்டுக் கொள்வது. ஆகவே, தயவு செய்து இதனை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சினிமா அரங்க காட்சியாளர்கள் சங்கத்தின் சார்பில் பல ஆண்டுகளாக திரை அரங்குகளைப் பராமரிக்க வேண்டி கட்டணத்தில் ஒரு பகுதியை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அது துறையின் சார்பில் மிகக் கவனமாக பலமுறை பரிசீலனை செய்யப்பட்டு, பலமுறை நிராகரிக்கப்பட்டுள்ளது. உள்துறையிலிருந்து அது பரிந்துரைக்கப்பட்டும், வணிக வரித்துறையால் அது

நிராகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இறுதியாக உத்திரப்பிரதேச மாநிலத்திலும், குஜராத்திலும் திரை அரங்குகளுக்கு, குளுகுளு வசதி செய்யப்பட்ட திரை அரங்கமானாலும் குளுகுளு வசதி செய்யப்படாத திரை அரங்கமானாலும், அதற்கேற்ப பராமரிப்பதற்கு தனிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது என்பது எடுத்துக் கூறப்பட்டது. தற்போது தமிழகத்தில் மட்டும் அல்ல, உலகத்தில் எல்லா இடங்களிலும், திரை அரங்கினுடைய தொழில்கள் நசிந்து வருவதை எல்லோரும் கண்கூடாகக் காண்கிறோம். காரணம், நமது சட்டமன்ற உறுப்பினர்களுடைய வீட்டில் திரையரங்குகள் இல்லாவிட்டாலும், திரைப்படத்தினை அங்கே கண்டு களிப்பதற்கு உண்டான வசதிகளைப் பெற்றிருக்கிறார்கள். முன்பு எத்தனை முறை ஒரு மாதத்திலே, ஒரு ஆண்டிலே திரைப்படங்களைக் காண குடும்பத்தோடு சென்றோம். இப்போது எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன திரைப்பட அரங்கின் உள்ளே நுழைந்து என்பது உங்களுக்கே தெரியும். தமிழகத்தில் சில திரை அரங்குகள் இப்போது குடோன்களாக மாறிக் கொண்டு வருகின்றன.

இந்த நிலையில், ஒரு பாப்புலர் கவர்மென்டை அணுகி தங்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்லி, தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று விரும்புவது நடைமுறையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. ஒத்துக்கொள்ளக்கூடிய ஒன்று. அந்த வகையில், இந்த அரசை அவர்கள் அடுத்தடுத்து அணுகியதைத் தொடர்ந்து குளுகுளு வசதி செய்யப்பட்ட திரை அரங்குகளுக்கு வரி விதிப்பிற்கு அப்பாற்பட்ட வகையிலே 50 பைசாவும், குளு குளு வசதியற்ற திரை அரங்குகளுக்கு வரி விதிப்பிற்கு அப்பாற்பட்ட வகையிலே ஒரு டிக்கெட்டுக்கு 25 பைசாவும், திரை அரங்கினை சிறப்பாக பராமரிப்பதற்காக அவர்கள் கட்டணமாக வசூல் செய்து கொள்ளலாம் என்று 6-1-1993-ல் உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவு நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த உத்தரவிற்கு வணிக வரிகள்துறையின் மூலமாக சட்டம் கொண்டு வருவதற்கு இந்த சட்டத் திருத்தம் வகை செய்கிறது. ஆகவே இது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. இப்போது உறுப்பினர் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். இந்த சட்டத் திருத்தத்தினை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியதுபோல் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிற காரணத்தால், அவை நடக்கிறபோது விவாதித்து பின்னர் அந்த ஆணையை வெளியிட்டிருக்கலாம். மேலும், 1993-லே ஆணை

போட்டதற்கு 1995-லே நீங்கள் சட்டத்திருத்தம் கொண்டு வந்துள்ளீர்கள். நான் அரசுக்கு சொல்ல விரும்புவதெல்லாம் இது ஒரு தவறான முன்னுதாரணமாக அமைந்து விடும் என்பதுதான்.

அடுத்து, சினிமா தொழில் நசிந்து கொண்டிருக்கிறது என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. நீங்கள் வரி விதிப்பிலிருந்து 50 பைசா, 25 பைசா குறைத்துக் கொள்ளலாம். அதனால் அரசுக்கும் பெருநஷ்டம் வராது. சாதாரண ஏழையெளிய மக்களுக்கு உள்ள ஒரே பொழுதுபோக்கு சினிமாதான். அந்த சினிமா பொழுது போக்கிலே கூட நீங்கள் வயிற்றிலே அடிப்பது என்பது நல்லதல்ல. உங்களுக்கு 25 காசு, 50 காசு என்பது பெரிய தொகை அல்ல. அரசாங்கமே வரி விதிப்பிலே குறைத்துக் கொள்ளலாம். ஆகவே, இதை நீங்கள் எடுத்து விட வேண்டுமென்று மக்கள் சார்பாகவும், காங்கிரஸ் கட்சி சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் பராமரிப்புக் கட்டணம் 25 காசு, 50 காசு வசூலிக்கப்படுகிறது. அதே அனுமதிச்சீட்டில், டிக்கட் கட்டணத்துடன் 25 பைசா, 50 பைசா என்று பராமரிப்புக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

Thiru C. Gnanasekaran: The person who is going there should pay the maintenance charge.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கட்டணம் தனியாக வசூலிப்பதில்லை. ஒரு டிக்கட் விற்றிருக்கிறார்கள் என்றால் அதில் இதுவும் இடம் பெறும்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேணுகை சார்ஜ் என்று போடுகிறார்களே, அதாவது மெயின்டெனன்ஸ் சார்ஜ் ஒரு டிக்கட்டுக்கு 25 காசு, 50 காசு என்று போடுவதை சினிமா தொழில் நசிவடைகிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். உங்கள் வரி விதிப்பில் வேண்டுமென்றால் குறைத்துக் கொள்ளுங்கள். சினிமா பார்க்கிற மக்கள் தலையில் ஏன் இதைக் கட்டுகிறீர்கள் என்று தான் கேட்கிறேன்.

1995 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உத்தரவிட்டு விட்டு இப்போது புதிதாகச் சட்டம் கொண்டு வருகிறோம் என்பதைக் குறைபாடாகச் சொன்னார். வணிக வரித்துறையைப் பொறுத்தவரையில் அந்த அந்தத் துறையில் என்ன உத்தரவு இட்டிருக்கிறார்களோ அந்த உத்தரவுக்கு ஏற்ப வரி வசூல் செய்வதற்கு பிற்காலத்தில் ஆய்வு செய்து, சட்டத்திருத்தம் கொண்டு வருகிறோம். ஆக வணிக வரித் துறை கொண்டுவந்த உத்தரவு அல்ல இது. ஒவ்வொரு துறையிலும் ஆய்வு செய்து, அந்தத் துறைகளுடைய முடிவுகளுக்கு ஏற்ப சில உத்தரவுகள் அரசாணையின் மூலம் வெளியிடப்படும். அந்த அரசாணைகளுக்கு இணங்க வணிக வரித்துறையில் வரிவசூல் முறைக்காக சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருகிறோம். அதுதான் இப்போது நடந்திருக்கிறதே தவிர, முன்னரே இதை அனுமதி இல்லாமல் செய்துவிட்டு, இப்போது கொண்டு வருவது என்பது அல்ல. ஏற்கெனவே தீர ஆய்வு செய்துதான் அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அந்த உத்தரவிற்கேற்ப இந்தத் துறை சட்டத்தைத் திருத்திக் கொள்கிறது. இதுதான் இப்போது நடந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தை சொன்னார். வரி விதிப்பில் நீங்கள் குறைத்துக் கொள்வதுதானே என்று. வரி விகிதத்தை நாம் ஏற்கெனவே பலமுறை பரிசீலனை செய்து முறைப்படுத்தியிருக்கிறோம். உள்துறையில் இடப்பட்ட உத்தரவுக்கு இணங்க இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 50 பைசா ஒரு திரையரங்கில் ஒரு டிக்கட்டுக்குண்டான தொகையில் கூடுதலாக, திரையரங்கின் பராமரிப்பிற்காக வசூல் செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 40 சதவிகிதம் நமக்கு வரியாக, வரவேண்டும். அப்படி வரவேண்டும் என்று சொன்னால் அதில் 20 பைசா வரியாக வரவேண்டும். அதைத் திரையரங்குகளுடைய பராமரிப்புக்காக நாம் விட்டுக் கொடுக்கிறோம். வரிவிலக்கு என்ற வகையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநகராட்சி அல்லாத நகராட்சிகளில் ஏனைய ஊராட்சிப் பகுதிகளில் அது 20 சதவிகிதம், 13 சதவிகிதம் என்று ஏற்கெனவே வரி விதிக்கிறோம். அந்த வகையில் நாம் விட்டுக் கொடுப்பது 5 பைசாவும் 3 பைசாவும் தான். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த விளக்கத்தினை ஏற்றுக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவினை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 32/1995) நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

1995 நவம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(எ) பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த சட்டமுன்வடிவு. 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1995), மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 37/1995) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 7-11-1995-ஆம் நாளைய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS